# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

## இலங்கை, இணாமலுவ - இலங்கை வனவியல் நிறுவகத்தின் வெளியக பயிற்சி நிலையத்தின் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திக்கான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

## IFB No.: LK-ESCAMP-PMU-97198-CW-RFB

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை இலங்கை, இணாமலுவ - இலங்கை வனவியல் நிறுவகத்தின் வெளியக பயிற்சி நிலையத்தின் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திக்கான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

02. வனபரிபாலன திணைக்களத்திற்காக இணாமலுவ, இலங்கை வனவியல் நிறுவகத்தின் வெளியக பயிற்சி நிலையத்தின் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திக்கான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார். மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 200 மில்லியன் ரூபாவாகும்.

இப்பணியின் நோக்கமானது வரைபடங்கள், அளவுக்குறிப்புக்கள் சுற்றாடல் ரீதியிலான முகாமைத்துவ திட்டம் மற்றும் கணியப்பட்டியல் ஆகியவற்றில் விபரிக்கப்பட்டவாறான பொறிமுறை மற்றும் மின்னியல் வேலைகள் அடங்கலாக இணாமலுவ வெளியக பயிற்சி நிலையத்திற்காக இருபத்தைந்து (25) கட்டிடங்களுக்கான சிவில் வேலைகளை அடக்குகின்றது.

நிர்மாணக் காலப்பகுதியானது அண்ணளவாக 365 நாட்களாகும்.

03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

- ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர் கட்டிடங்கள் நிர்மாண விஷேடத்துவத்தில் CIDA (முன்பு ICTAD என அழைக்கப்பட்டது) உடன் சி-3 தரத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
- கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 300 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலவிடப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலான ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது செயற்றிட்ட திட்டவட்டமாக குறிக்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவானதாக இருத்தல் கூடாது.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2019.05.02 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்க, ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம், பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலேயுள்ள முகவரியில் சாதாரண வேலை நேரங்களில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம் (தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: 0112888426/0112888427).

05. 2019.03.25 ஆம் திகதியிலிருந்து 2019.04.26 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 50,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், CIDA பதிவின் பிரதியொன்றுடன் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்க, ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு ஒரு தனியான தபாலுறையில் சேர்க்கப்பட்டு தபாலுறையின் மேற்பகுதியில் ஒப்பந்த இலக்கம் மற்றும் நிர்மாணத் தலைப்பு ஆகியன குறிப்பிடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2019.05.02 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்க, ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை முடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

07. தளவிஜயம் மற்றும் பரீட்சித்தல் ஆகியன 2019.04.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும். விலைமனு முன்கூட்டமானது அதே நாள் (2019.04.09) பி.ப. 2 மணிக்கு இணாமலுவ வெளியக பயிற்சி நிலைய இடப்பரப்பில் விலைமனு முன்கூட்டம் நடைபெறும்.

08. விலைமனுக்கள் 2019.10.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

09. அனைத்து விலைமனுக்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட ''விலைமனுப்பிணையொன்றுடன்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது இரண்டு மில்லியன் ரூபாவிற்கு மாத்திரமாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்றவாகவும் இருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2019.10.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

10. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 படிவத்தை (1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம்) இணைத்தல் வேண்டும்.

11. தள விஜயங்கள் தொடர்பான ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலாக விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

12. பெற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான முழுமையான உரிமையை செயற்றிட்ட பெறுகைக் குழுவானது கொண்டுள்ளதுடன் இது தொடர்பில் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.